(ஆ) அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டம் கடுமையாகிக் கொண்டிருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றே சொல்லிவிட்டீர்கள். விட்டுவிடுங்கள்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.